(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.489/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.3 (LW.3) (Through VC)

| | | |
|---|---|---|
| Name | : | பிரபாவதி |
| Father's Name | : | கண்ணன் |
| Village | : | தர்மபுரி |
| Taluk | : | தர்மபுரி |
| Occupation | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 48 |

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **24.06.2026.**

<u>முதல் விசாரணை:–</u>

1) நான் தற்பொழுது கிருஷ்ணகிரி மாவட்டம் நல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.09.2025 – ம் தேதி 6.00 மணியளவில் மதுவிலக்கு ரோந்து அலுவல் சம்பந்தமாக திருச்செங்கோடு மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக நானும் மற்றும் போலீஸ் பார்டி த.காமாதேஸ்வரன் மற்றும் வீரமணி ஆகியோர்களுடன் திருச்செங்கோடு நகர காவல் நிலைய சரகம் சேலம் ரோடு ஆலமரம் டாஸ்மாக் பின்புறம் கண்காணித்து கொண்டிருந்தபோது ஒரு நபர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை சந்தேகத்தின் பேரில் அவரை பிடித்து விசாரிக்க அவர் தன் பெயர் வெங்கடேஷ் என்றும் அவர் தன் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்த போது 180 ml அளவு கொண்ட Black Pearl BRANDY –27 பாட்டில்கள் இருந்தன. அவரை விசாரிக்க அவர் மேற்படி மது பாட்டில்களை டாஸ்மார்க் கடையில் வாங்கி சுய லாபத்திற்கு அதிக

விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல்படுத்தி பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால் போலீஸ் சாட்சி முன்னிலையில் 6.30 மணியளவில் கைப்பற்றுதல் மகசரில் மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றினேன். பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண். 274/2025 ச/பி. 4(1)(C) TNP Amendement Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் கைப்பற்றிய அரசு மதுபான பாட்டில்களை G.O M.S) No.39, Dtd 22.10.2019 Home prohibition and excise (VIII) Department ன் படி உதவி ஆணையாளர் கலால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களின் மேல் நடவடிக்கைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து கைப்பற்றிய மதுபாட்டில்களை கலாலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த கடிதம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் வீரமணி மற்றும் மாதேஸ்வரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் எதிரியை கைதுசெய்து தக்க பிணையில் விடுவித்தேன். பின்னர் எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல்செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

இந்த வழக்கில் நான் தான் புகார்தாரராக இருந்து சுயமாக பதிவு செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரியும், இறுதியறிக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானே புகார்தாரராக இருந்து வழக்கை விசாரித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல. எனது புகாரில் எதிரி சாக்குபையில் 27 பாட்டில்களை வைத்திருந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் கைப்பற்றுதல் மகசரில் சாக்குபையை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு எதிரியின் வீட்டிலிருந்து நான் எந்த மதுபான பாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரி அதிக விலைக்கு மதுபானம் விற்பதற்கு வைத்துள்ளதாக வழக்கு பதிவு செய்துள்ளேன், எதிரியிடமிருந்து மதுபானம் வாங்கியதாக ஏதேனும் நபர்களை சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி மதுபானம் விற்று தொகை ஏதேனும் வைத்திருந்திருந்ததாக நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. எதிரி

வையப்பமலை பள்ளிக்கு அருகில் மதுபானம் விற்றதாக எனக்கு தனிப்பட்ட புகார் ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. நான் புகாரில் சொன்னவாறு எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றாலும், நான் பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நான் சொல்லப்பட்ட நேரத்தில் சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யான ஒரு வழக்கு பதிவு செய்து தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பார்வை மகஜரோ, ஒப்புதல் வாக்குமூலமோ, மாதிரி வரைபடமோ தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை –** இல்லை.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.24 20:42:47 +0530